அகில இந்திய வானொலி
திருச்சிராப்பள்ளி

# ஆகாசவாணி செய்திகள்

01.45 pm

**22.03.2025**

## தலைப்புச்செய்திகள்

1. **நீர்வள பாதுகாப்பு திட்டங்களை** செயல்படுத்துவதில் மத்தியஅரசு உறுதியுடன் இருப்பதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. **ஜல்ஜீவன் இயக்கத்தின் மூலம் கோடிக்கணக்கான** வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு.சி.ஆர்.பாட்டில் கூறியுள்ளார்

3. **தொகுதி மறு சீரமைப்பு குறித்து ஆராய வல்லுனர் குழு அமைக்க** வேண்டுமென்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்

4. **வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக கோவை, நீலகிரி, தேனி,** கன்னியாகுமரி உள்ளிட்ட 10 மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

5. 18-வது **ஐ.பி.எல்** 20-20 **கிரிக்கெட்** போட்டிகள் கொல்கத்தாவில் இன்று தொடங்குகின்றன.

## இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖

**பிரதமர்**

**நீர் பாதுகாப்பிற்கான திட்டங்களை** செயல்படுத்துவதில் மத்திய அரசு உறுதியுடன் இருப்பதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

உலக தண்ணீர் தினம் இன்று கடைபிடிக்கப் படுவதை ஒட்டி சமூக வலைதளப்பதிவில் அவர் வெளியிட்ட செய்தியில் எதிர்கால சந்ததியினரின் நலன்கருதி வாழ்வின் அடிப்படை ஆதாரமான தண்ணீரை சேமித்து, பாதுகாப்பதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்

❖❖❖❖❖❖❖

**தண்ணீர் தினம் - சி.ஆர்.பாட்டில்**

**உலகளாவிய தண்ணீர் பிரச்சனையின் மத்தியிலும்** சவால்களை வாய்ப்புகளாக மாற்றி இந்தியா தனி ஒரு தேசமாக உருவெடுத்துள்ளது என்று மத்திய ஜல்சக்தி அமைச்சர் திரு.சி.ஆர்.பாட்டில் தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திரமோடி தலைமையின் கீழ் நீர்பாதுகாப்பு ஒரு கொள்கையாக வகுக்கப்பட்டுள்ளதோடு ஒரு மாபெரும் இயக்கமாக இது முன்னெடுத்துச் செல்லப்படுவதாக அவர் கூறினார்.

ஜல்ஜீவன் இயக்கத்தின் மூலம் நாடுமுழுவதும் கோடிக்கணக்கான வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக அவர் எடுத்துரைத்தார்.

நிலத்தடி நீர் மேம்பாட்டு திட்டத்தின் மூலம் குறையும் நீர்மட்டம் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு நீர்வள கட்டமைப்பு திட்டங்களால் நீராதரங்களுக்கு புத்துயிர் அளிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இயற்கையோடு ஒன்றித்து வாழ்வதே நீர் பிரச்சனைகளுக்கு தீர்வாக அமையும் என்பதை **பனிப்பாறை பாதுகாப்பு** என்ற இந்த ஆண்டின் கருப்பொருள் உணர்த்துவதாக அவர் குறிப்பிட்டார்.

ஒவ்வொரு துளி நீரை பாதுகாத்து எதிர்கால சந்ததிகளுக்கு வளமான இந்தியாவை படைக்க உறுதி ஏற்பதன் அவசியத்தையும் அமைச்சர் வலியுறுத்தினார்.

❖❖❖❖❖❖❖

**தண்ணீர் தினம் தொடர்ச்சி**

**2024-ம் ஆண்டிற்கான சிறந்த ஒருங்கிணைந்த** நீர்வள மேலாண்மைக்கான தேசிய விருது தமிழகத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிலையில் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் நீர் மேலாண்மை குறித்த விழிப்புணர்வு நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

நாமக்கல் சேந்தமங்கலம் அரசினர் கலைக்கல்லூரியில் நடைபெற்ற உலக தண்ணீர் தின நிகழ்ச்சியில் மரம் நடுவதன் மூலம் நீர் சேமிப்பதன் வாய்ப்புகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

வேலூர் நாகநதியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் மேற்கொண்ட முனைப்பு நடவடிக்கைகளால் அனைத்து காலங்களிலும் நதிவற்றாமல் இருப்பதாக உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அப்பகுதி பெண்கள் தெரிவிக்கையில்

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖❖

**சர்வதேச புவி நேரம்**

**சர்வதேச புவி நேரம் இன்றிரவு கடைபிடிக்கப்படுகிறது**

புவி பாதுகாப்பை வலியுறுத்தும் வகையில் இரவு எட்டரை மணிமுதல் ஒன்பதரை மணிவரை, உலகெங்கிலும் விளக்குகள் அணைக்கப்பட்டு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு முன்னெடுத்து செல்லப்படுகிறது

இந்தியாவிலும், தண்ணீர் பாதுகாப்பின் அவசியத்தை வலியுறுத்தும் நிகழ்வுகளுடன் புவிநேரம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

❖❖❖❖❖❖❖

**தொகுதி மறு சீரமைப்பு**

**மத்திய அரசின் தொகுதி மறு சீரமைப்பு** நடைமுறைகள் ஜனநாயக கூட்டாண்மை மற்றும் மாநிலங்களின் சமச்சீரான பிரதிநிதித்துவத்தை குறைக்கும என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் முதலமைச்சர் தலைமையில் நடைபெறும், தொகுதி மறு சீரமைப்பு தொடர்பான முதலாவது கூட்டு நடவடிக்கை குழு கூட்டத்தில் இன்று உரையாற்றியஅவர், இதுதொடர்பாக ஆராய்ந்து ஆய்வுசெய்ய வல்லுனர் குழு ஏற்படுத்தப்பட வேண்டுமென்று வலியுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் பங்கேற்றுள்ள கேரள முதலமைச்சர் திரு. பினராய் விஜயன் பேசுகையில், தேசத்தின் பன்முகத்தன்மை பாதுகாக்கப்பட வேண்டுமென்று குறிப்பிட்டார்.

கர்நாடக மாநில துணை முதலமைச்சர் திரு. டி.கே. சிவகுமார் பேசுகையில் மக்கள் தொகையை கட்டுப்படுத்திய தென்மாநிலங்கள், அரசியல் பிரதிநிதித்துவத்தை இழக்க நேரிடும் என்று கவலை தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் பஞ்சாப் முதலமைச்சர் திரு. பகவந்த் சிங் மான், தெலங்கானா முதலமைச்சர் திரு. ரேவந்த் ரெட்டி உள்ளிட்டோர் பங்கேற்றுள்ளனர்.

இந்த கூட்டத்தின் முதல் அமர்வில் கூட்டாண்மை மற்றும் தொகுதி சீரமைப்பு தொடர்பான பிரச்சனைகள் குறித்து விவாதிக்கப்படுகின்றன.

❖❖❖❖❖❖❖

டாஸ்மாக்

**தமிழ்நாட்டில் டாஸ்மாக் விற்பனையில் ஊழல்** நடைபெறுவதாக கூறி பாரதிய ஜனதா கட்சியினர் இன்று மாநிலம் முழுவதும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தென் சென்னை பனையூரில் பி.ஜே.பி. மாநிலத்தலைவர் திரு. அண்ணாமலை தலைமையில் கருப்பு சட்டை போராட்டம் இன்று நடைபெற்றது.

இதில் பேசியஅவர், டாஸ்மாக் ஊழல் புரிந்தவர்கள் கைது செய்யப்படவேண்டுமென்று குறிப்பிட்டார்.

தொகுதி மறு சீரமைப்பில் தமிழகத்திற்கு எந்த பிரச்சனையும் இல்லை என்று கூறியஅவர், இதுதொடர்பாக முதலமைச்சர் தலைமையில் நடைபெறும் கூட்டம் வெறும கண்துடைப்பே என்றார்

நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தில் கட்சியின் மாநில துணைத்தலைவர் திரு. **K.P.** ராமலிங்கம் தலைமையில் அரசுக்கு எதிராக கருப்புசட்டை அணிந்து கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு. கே.பி. ராமலிங்கம், டாஸ்மாக் ஊழலை மறைப்பதற்காகவே தமிழக அரசு மும்மொழி கல்விக்கொள்கை, தொகுதி மறுசீரமைப்பு எதிர்ப்பு கூட்டங்களை நடத்துவதாக குறைகூறினார்.

நெல்லையில் பி.ஜே.பி. சட்டமன்ற குழு தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் தலைமையில் பி.ஜே.பியினர் இன்று கருப்பு கொடி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழகத்தில் திமுக பலவீனமாக உள்ளதால் அதனை திசை திருப்பவே திமுக அரசு தொகுதி மறுசீரமைப்பு உள்ளிட்ட பிரச்சனைகளை கிளப்புவதாக குறைகூறினார்.

❖❖❖❖❖❖❖

சுதாகர்ரெட்டி

தொகுதி மறுசீரமைப்பு தொடர்பாக தமிழக முதலமைச்சர் மற்றும் INDI கூட்டணி தலைவர்கள் தவறான தகவல்களை பரப்புவதாக பி.ஜே.பி. தேசிய இணை பொறுப்பாளர் திரு. சுதாகர் ரெட்டி குற்றம் சாட்டியுள்ளார்.

திருச்சி விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், வாக்குகளுக்காக திமுக அரசு மக்களை திசைத்திருப்புவதாக குறைகூறினார்.

தேர்தல் வாக்குறுதிகள் எதையும் திமுக அரசு நிறைவேற்றவில்லை என்று கூறியஅவர், பி.ஜே.பி. அரசு மாநிலங்களின் முன்னேற்றத்திற்கான அனைத்து திட்டங்களையும் வகுத்து செயல்படுத்தி வருவதாக குறிப்பிட்டார்.

தமிழகத்தில் தேசிய நெடுஞ்சாலைகள், விமான நிலையங்கள், ரயில் நிலையங்கள் என பல்வேறு பணிகள் நடைபெறுவதை அவர் சுட்டிக்காட்டினார்.

தமிழ்நாட்டில் திமுக அரசின் ஊழல் குற்றங்களை மக்களிடையே கொண்டு செல்லும் வகையில் தொடர்ந்து போராட்டங்கள் நடைபெறும் என்றார்.

வரும் சட்டமன்ற தேர்தலில் பி.ஜே.பி. கூட்டணி குறித்து மேலிடம் முடிவு செய்யும் என்றும் திரு. சுதாகர் ரெட்டி தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖

மூர்த்தி

**தமிழகத்தில் பொதுமக்களின் வசதிக்காக** போக்குவரத்து சேவைகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக மாநில வணிகவரி பதிவுத்துறை அமைச்சர் திரு. மூர்த்தி தெரிவித்துள்ளார்.

மதுரை மாட்டுதாவணி பேருந்து நிலையத்திலிருந்து 36 புதிய பேருந்து சேவைகளை இன்று தொடங்கிவைத்த அவர், தொலைதூர கிராமங்களுக்கும் பேருந்து சேவைகள் அதிகரிக்கப்படுவதாக கூறினார்.

மாவட்டத்தில் 13 ஆயிரம் பேருக்கு வீட்டுமனை பட்டா வழங்கப்பட்டதாக கூறியஅவர், உச்சநீதிமன்ற உத்தரவிற்கு ஏற்ப ஏரி, ஓடை, கண்மாய் உள்ளிட்ட நீர்நிலைகளை தவிர பிற புறம்போக்கு நிலங்களில் பட்டா வழங்கப்படுவதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖

செந்தில்பாலாஜி

**தமிழகத்தில் கோடைக்கால தேவையை** விட கூடுதல் மின்சாரம் இருப்பில் உள்ளதாக மாநில மின்துறை அமைச்சர் திரு.செந்தில் பாலாஜி தெரிவித்துள்ளார்.

கோவையில் இன்று நடைபெற்ற தனியார்த்துறை வேலைவாய்ப்பு முகாமில் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி பேசிய அமைச்சர், தமிழகத்தை மின்மிகை மாநிலமாக மேம்படுத்தும் வகையில் 7 ஆயிரம் மெகாவாட் அனல்மின் திட்டம் உட்பட புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖

**தா.மோ. அன்பரசன்**

தமிழகத்தில் மாணாக்கரின் தேவையை கருத்தில் கொண்டு கூடுதல் வகுப்பறைகள் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் நிறைவேற்றப்படுவதாக சிறு குறு நடுத்தர தொழில்துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்தூரில் 21 கோடி ரூபாய் மதிப்பில் ஆய்வகக்கூடம் கூடுதல் வகுப்பறைகளுக்கு இன்று அடிக்கல்நாட்டி பேசியஅவர், கல்வி மேம்பாட்டிற்கான திட்டங்கள் முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்தப்படுவதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖

**முல்லை பெரியாறு**

**முல்லை பெரியாறு அணையின் பாதுகாப்பு குறித்து தேசிய** அணைகள் பாதுகாப்பு ஆணையத்தலைவர் திரு.அனில் ஜெயின் தலைமையிலான 7 பேர் குழுவினர் இன்று ஆய்வு மேற்கொண்டனர்.

தமிழக நீர்வளத்துறை கூடுதல் தலைமை செயலர் திரு. மங்கத்ராம் ஷர்மா, காவிரி தொழில்நுட்ப குழு தலைவர் திரு. சுப்ரமணியன், கேரள நீர்பாசன உயரதிகாரிகள் இதில் பங்கேற்றனர்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

**தஞ்சை வாய்ஸ்**

**தஞ்சை மாநகராட்சியில் பிறப்பு, இறப்பு சான்றிதழ்களை** வீடுகளுக்கே சென்று நேரில் வழங்கும் திட்டம் தொடங்கப் பட்டுள்ளதாக மாநாகராட்சி மேயர் திரு.ராமநாதன் தெரிவித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

**வானிலை**

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக கோவை மாவட்டத்தின் மலைபகுதிகள்,

நீலகிரி, திருப்பூர், தேனி, திண்டுக்கல், ஈரோடு, கிருஷ்ணகிரி, தர்மபுரி, ராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

❖❖❖❖❖❖❖

**இருவரி**

**மாணாக்கர் புத்தகங்களை படிப்பதன் மூலம் அறிவாற்றல்** அதிகரித்து எதிர்காலம் சிறந்து விளங்கும் என வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. சுப்புலட்சுமி தெரிவித்துள்ளார்.

கோட்டை மைதானத்தில் 3-வது புத்தகத் திருவிழாவை இன்று தொடங்கிவைத்து பேசியஅவர், இதனை மாணவர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்றார்.

**அரியலூர் மாவட்டம் திருமானூரில் மாசிமகத்தை** முன்னிட்டு இன்று நடைபெற்ற சிறப்பு ஜல்லிக்கட்டு போட்டியில் 600 காளைகளுடன் 400 மாடுபிடி வீரர்கள் தங்களது திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றனர்.

சிறப்பு மருத்துவ முகாம்களும் அமைக்கப் பட்டுள்ளன.

❖❖❖❖❖❖❖

**கிரிக்கெட்**

**18-வது IPL 20-20 கிரிக்கெட்** போட்டிகள் இன்று தொடங்குகின்றன

கொல்கத்தாவில் இரவு ஏழரை மணிக்கு நடப்பு சேம்பியன் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் - ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூருவை எதிர்கொள்கிறது.

சென்னை சேப்பாக்கம் விளையாட்டரங்கில் சென்னை சூப்பர் கிங்ஸ் தனது முதல் போட்டியில் நாளை - மும்பை இண்டின்ஸுடன் மோதுகிறது.

❖❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**